மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை:

உண்மைக்கு மாறான செய்திகளைச் சொல்லி மக்களைக் குழப்புவதா?

ஒன்றிய நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் கண்டனம்!

சென்னை, ஆக.12-

"மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை குறித்து உண்மைக்கு மாறான செய்திகளைச் சொல்லி மக்களைக் குழப்புவதா?" என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று முன்தினம் (10.08.2023) மாடு முட்டியதால் காயமடைந்து, அமைந்தகரை, பில்ரோத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று தற்போது குணமடைந்துவரும், சென்னை, எம்.எம்.டி.ஏ காலனி, முகமது சதக் பள்ளி மாணவி செல்வி.ஆயிஷா சித்திக்கை (வயது 9) நேரில் சந்தித்து நலம் விசாரித்து, அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார்.

இதன் பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

நேற்று மாலை சென்னை அரும்பாக்கம் MMDA காலனியில் உள்ள முகமது சதக் பள்ளியில் 9 வயது சிறுமி ஆயிஷா சித்திக் என்பவர் பள்ளிக்குச் சென்று, வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்த நிலையில், அந்த சாலையில் சென்று கொண்டிருந்த மாடு ஒன்று முட்டியது, அந்த செய்தி அது சமூக வலைதளம் மூலம் மிகப்பெரிய அளவிற்கு பரவலாக்கப்பட்டது. அக்குழந்தையை அந்த மாடு தூக்கி அடித்து அக்குழந்தையை மிதிக்கின்ற அந்த காட்சி மனதை பதைபதைப்பதாக இருந்தது. அந்தக் குழந்தையின் பெற்றோர் உடனடியாக சென்னை அமைந்தகரையில் உள்ள பில்ரோத் மருத்துவமனையில் அனுமதித்து இருக்கிறார்கள். அக்குழந்தைக்கு தேவையான மருத்துவ சிகிச்சைகளை மருத்துவர்கள் உடனடியாக செய்து தலையில் அடிபட்டிருக்கும் பகுதிகளில் சிடி ஸ்கேன் எடுத்து சிகிச்சை வழங்கியிருக்கிறார்கள்.

மேலும் தலையில் ஏற்பட்டிருக்கும் காயத்திற்கு எங்கேயும் எலும்பு முறிவுகள் இருக்கிறதா என்பதையும் கண்டறிந்திருக்கிறார்கள். கண்ணில் மட்டும் சிறிய அளவில் இரத்தக் கசிவுகள் இருக்கின்றது, தற்போது இதற்காக சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது, அந்த குழந்தை நலமுடன் இருக்கிறார், அனைவரிடமும் நன்றாக பேசிக் கொண்டிருக்கிறார். சரியான நேரத்தில் அந்த குழந்தையை மருத்துவமனைக்கு அழைத்து வந்து அவர்களின் பெற்றோர் அக்குழந்தையை காப்பாற்றியிருக்கிறார்கள்.

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை தொடர்பாக ஒன்றிய அரசின் நிதித்துறை அமைச்சர் அவர்களின் பேச்சுக்கு பதில்:

செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பட்டமளிப்பு விழாவை நிறைவு செய்து சென்னை திரும்பிக்கொண்டிருந்த வழியில், பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து ஒன்றிய அரசின் நிதித்துறை அமைச்சர் அவர்களின் பதிலைப் பார்த்தேன். நிதித்துறை அமைச்சர் என்ற பெரிய பொறுப்பில் இருப்பவர் ஒரு உண்மைக்கு மாறான செய்திகளை சொல்லி மக்களை குழப்புவது என்பது தவறானது. எய்ம்ஸ் மருத்துவமனை இன்றைக்கு காலதாமதம் ஆவதற்கு காரணம் மாநில அரசு இடத்தை கையகப்படுத்தி தராதது என்கின்ற வகையில் ஒரு செய்தியை கூறுகிறார். அதோடு மட்டுமல்லாமல் ரூ.1200 கோடியில் திட்டமிடப்பட்டது ரூ.1900 கோடியாக உயர்ந்து இருக்கிறது என்கின்ற தகவலையும் சொல்லி இதற்கெல்லாம் தமிழ்நாடு அரசு காலதாமதம் செய்ததுதான் காரணம் என்று தவறான கருத்தை கூறியிருந்தார்.

2015-ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் சார்பில் 7 இடங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை வரும் என்று அறிவிக்கப்பட்டது. உத்திரப்பிரதேசத்தில் இருக்கின்ற கோரக்பூர், அசாம்மில் இருக்கின்ற கவுகாத்தி, ஜம்முவில் ஒரு மருத்துவமனை, இமாச்சலப்பிரதேசத்தில் உள்ள பிலாப்பூர், பீகார், காஷ்மீரில் உள்ள அவந்திபூரா, மதுரை தோப்பூரில் ஒரு மருத்துவமனை என்று 7 மருத்துவமனைகள் அப்போது அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்ட இந்த 7 மருத்துவமனைகளும் ஒரே நேரத்தில் அறிவிக்கப்பட்டவைகள் என்றாலும் இப்போது கோரக்பூர் மருத்துவமனையை பொறுத்தவரை முழுமையாகவே இயங்க தொடங்கியிருக்கிறது. இதே 2015-ல் அறிவிக்கப்பட்ட மருத்துவமனை தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது அசாம், கவுகாத்தியில் அறிவிக்கப்பட்ட மருத்துவமனை தற்போது வகுப்புகள் தொடங்கப்பட்டுவிட்டது, மருத்துவமனை கட்டிடம் மட்டும் இன்னும் தொடங்கப்படவில்லை. ஜம்முவில் அறிவிக்கப்பட்ட மருத்துவமனையிலும் மருத்துவக் கல்வி வகுப்புகள் தொடங்கியிருக்கிறது, மருத்துவமனை மட்டும் இன்னும் தொடங்கப்படவில்லை.

இமாச்சலபிரதேசத்தில் உள்ள பிலாஸ்பூரில் அறிவிக்கப்பட்ட மருத்துவமனை முழுமையாக பயன்பாட்டில் இருந்துக் கொண்டிருக்கிறது. பீகாரில் தர்மாந்தா என்கின்ற இடத்தில் அறிவிக்கப்பட்ட மருத்துவமனை பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காஷ்மீரில் உள்ள அவந்திபூரா என்கின்ற இடத்தில் தொடங்கப்பட்ட மருத்துவமனையும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மதுரை உங்களுக்கு தெரியும், அடுத்து 2017-ஆம் ஆண்டு ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஒரு மருத்துவமனையை அறிவித்தார்கள், அது இப்போது முழு பயன்பாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் ஒரு மருத்துவமனையை அறிவித்தார்கள், அதில் வகுப்புகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தெலுங்கானாவில் ஒரு மருத்துவமனையை அறிவித்தார்கள், அது தற்போது முழு பயன்பாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. இதன்பிறகு 2019 இல் அரியானாவில் மதுரா என்கின்ற இடத்தில் ஒரு மருத்துவமனையை அறிவித்தார்கள், அந்த பணிகள் நடைபெற்று வருகிறது. 2015-இல் 7-ம், 2017-இல் 3-ம், 2019-இல் 1-ம் அறிவிக்கப்பட்டு ஒரு சில மருத்துவமனைகள் பயன்பாட்டில் இருக்கிறது. ஒரு சில மருத்துவமனைகளில் வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு சில மருத்துவமனைகயில் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

2022-இல் மணிப்பூர், கர்நாடகா ஆகிய மாநிலங்களில் கடந்த ஆண்டு 2 மருத்துவமனைகளை அறிவித்திருக்கிறார்கள். அந்த 2 மருத்துவமனைகளுக்கு இடங்கள் தேர்வு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனால் 2015-இல் மதுரை தோப்பூரில் 7 மருத்துவமனைகளில் ஒன்றாக அறிவிக்கப்பட்ட மருத்துவமனைக்கு ஒன்றிய அரசின் பிரதமர் அவர்களால் ஜனவரி 27, 2019 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் தற்போது எந்த விதமான கட்டுமானப் பணிகளும் நடைபெறாமல் உள்ளது. இன்றைக்கு நிதித்துறை அமைச்சர் திருமதி.நிர்மலா சீத்தாராமன் அவர்கள், தமிழ்நாடு அரசு நில ஆர்ஜிதம் செய்து தரப்படாததால் மருத்துவமனை கட்டுவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்கிறார்.

நிர்மலா சீத்தாராமன் அவர்களுக்கு நாம் வைக்கின்ற கேள்வி என்னவெனில் 2019 ஜனவரி 27 இல் அதாவது 4 ஆண்டுகளுக்கு முன்னால் நில ஆர்ஜிதம் செய்யப்படாத ஒரு இடத்தில் பிரதமர் எப்படி வந்து அடிக்கல் நாட்ட முடியும்? அரசாங்கத்திற்கு சொந்தமில்லாத ஒரு இடத்தில் அடிக்கல் நாட்டி சென்றிருக்கிறீர்கள் என்றால் இது யாரை ஏமாற்ற, நில ஆர்ஜிதமே செய்யப்படாத ஒரு இடத்தில் பிரதமரே நேரடியாக வந்து அடிக்கல் நாட்டி சென்றிருப்பது தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றுவதற்காகவா, இது எவ்வளவு பெரிய கேலிக்கூத்து.

ஏனெனில் இந்த இடம் 222.47 ஏக்கர் அரசாங்கத்திற்கு சொந்தமான இடம், இது ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லை, இந்த இடத்தை நிலமாற்றம் செய்து தரப்படவேண்டும், ஒன்றிய அரசிற்கு இதனை மாற்றம் செய்து தரவேண்டும், முழுமையாக இதற்கு எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான முந்தைய அரசு இந்த இடத்தை நில மாற்றம் செய்து ஒன்றிய அரசிற்கு தந்திருக்கிறார்கள்.

பின்னர் ஒன்றிய அரசின் பிரதமர் அவர்கள் அடிக்கல் நாட்டியுள்ளார்கள். அதன்பிறகு 2020 பிப்ரவரி திங்கள் 4-ந்தேதியும், 5-ந்தேதியும் JICA அமைப்பைச் சார்ந்த நிர்வாகிகள் அந்த இடத்தை ஆய்வு செய்கிறார்கள். ஆய்வு செய்து விட்டு அந்த 222.47 ஏக்கர் நிலத்திற்கும் சுற்றுச்சுவர் கட்ட வேண்டும் என்று முடிவெடுக்கிறார்கள். சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ஒன்றிய அரசு ரூ.15 கோடி ஒதுக்குகிறது. அந்தச் சுற்றுச்சுவர் கட்டும்பணி 2021 ஜனவரியிலேயே முடிவுற்றது. தி.மு.க அரசு பொறுப்பேற்றது என்பது 2021 மே திங்கள் 7-ந்தேதி, 2021 ஜனவரியில் சுற்றுச் சுவர் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

மற்ற மாநிலங்களில் 100% எய்ம்ஸ் மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் அனைத்தும் ஒன்றிய அரசின் நிதி ஆதாரத்தில் செயல்படுத்தப்படுகிறது. இதில் எந்த இடத்திற்கும் மாநில அரசின் நிதி ஆதாரம் இல்லை, மாநில அரசின் பங்களிப்பு என்பது நிலத்தை ஒதுக்கீடு செய்வது மட்டும் தான், ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் மாநில அரசு நிலத்தை ஒதுக்கீடு செய்த பின்னரும், ஒன்றிய அரசு நிதி ஆதாரத்தை தராமல் JICA விடம் கடன் வாங்க அறிவுறுத்துகிறது. மற்ற மாநிலங்களில் ஒன்றிய அரசின் நிதி ஆதாரத்தில் கட்டிடங்கள் கட்டப்படுகிறபோது, தமிழ்நாட்டில் மட்டும் ஒன்றிய அரசு நிதி தராமல் பாரபட்சம் காட்டப்படுகிறது.

முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அரசு இந்த பாரபட்சமான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை, கேள்வியும் எழுப்பவில்லை. இதற்கு ஒன்றிய அரசின் நிதித்துறை அமைச்சர் அவர்கள் நாடாளுமன்றத்தில் தெரிவித்த விளக்கத்தில், முதலில் 600 படுக்கைகளுடன் கட்டத்திட்டமிடப்பட்டு தற்போது 900 படுக்கைகளாக உயர்த்தப்பட்டுள்ளது என்று தெரிவித்து, இது ஒரு சாதனையாக சொல்லுகிறார்.

ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1 ½ ஆண்டுகளில், 1000 படுக்கைகளுடன், ரூ.376 கோடி மதிப்பீட்டில், சென்னை, கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை கட்டி திறந்து வைத்துள்ளார்கள். ஆனால் ஒன்றிய அரசு 4 ஆண்டுகளுக்கு முன்னாள் அடிக்கல் நாட்டி ரூ.1200 கோடியில் திட்டமிடப்பட்டது, தற்போது 1900 கோடியாக உயர்ந்துள்ளது என்று பெருமையுடன் கூறிவருகிறது.

நாங்கள் ஜப்பானில் உள்ள JICA விடன் இதுகுறித்து கேட்டபோது, 2024-ஆம் ஆண்டு இறுதியில் தான், கட்டிடத்தின் வடிவம் இறுதி செய்யப்பட்டு ஒப்பந்த புள்ளி கோரப்படும் 2028-ஆம் ஆண்டு தான் இந்த கட்டிடங்கள் முழுமையாக கட்டப்படும் என்று கூறியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, JICA நிறுவனத்திடம் கட்டிடம் கட்டுவதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்யும் பணியினை விரைந்து முடிக்க கோரியிருக்கிறோம். ஒன்றிய அரசின் நிதித்துறை அமைச்சர் அவர்களிடம், மற்ற மாநிலங்களுக்கு காட்டும் அக்கறையை தமிழ்நாட்டின் மீதும் காட்டி, மற்றவர்கள் மீது பழிபோட்டு தப்பிக்க பார்க்காமல், ஒன்றிய அரசே முழு நிதியையும் தந்து, இந்த மருத்துவமனையை கட்ட தொடங்கினால் 2 ஆண்டிற்குள் கட்டி முடிக்கலாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல்களைப்பெற்று, ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களை சந்திக்கும் போதெல்லாம், எய்ம்ஸ் மருத்துவமனையின் பணியினை விரைவு செய்ய கோரியதன் விளைவாகத்தான், கடந்த 2 ஆண்டுகளாக, ஒவ்வொரு ஆண்டும் 50 மாணவர்கள் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியில், மருத்துவக் கல்வி பயில்வதற்கு அனுமதியினை தந்திருக்கிறார்கள்.

ஆனால் அப்போதுகூட மதுரையில் இருக்கின்ற தனியார் கல்லூரி, கலைக்கல்லூரி, புதுச்சேரியில் உள்ள ஜிப்மர் கல்லூரியில் இந்த 50 மாணவர்கள் சேர்க்கை செய்திட கோரினார்கள். ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஒத்துக் கொள்ளாவில்லை, தமிழ்நாடு அரசின் கீழ் உள்ள இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரியில், எய்ம்ஸ் மாணவர்களை சேர்க்க அறிவுறுத்தியன் விளைவாகதான், தமிழ்நாட்டிற்கு ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக 50 மருத்துவ இடங்கள் கிடைத்து ள்ளது, எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் தமிழ்நாட்டில் அமைவதை உறுதி செய்யப்பட்டுள்ளது.

2019-ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு, 2020-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23-ஆம் தேதி முன்னாள் முதலமைச்சர் அவர்கள், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கான இடத்தினை ஒன்றிய அரசிடம் ஒப்படைப்பது தொடர்பான ஆவணத்தை கொடுத்துள்ளார். ஆனால் ஒன்றிய நிதித்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மாநில அரசு எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கான இடத்தை ஒப்படைக்கவில்லை என்று கூறுவது மிகவும் வருத்தத்திற்குரியது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

காலமெல்லாம் தமிழர் தம் மூச்சும் பேச்சும் கலைஞரே

முத்தமிழ் நற்றமிழ் மூதறிஞர் எம்கலைஞர்
வித்தாம் பெரியார் வேர்அறிஞர் -உத்தமர்கோ
அண்ணாவின் தம்பியாய் ஆச்சரிய மாய்வளர்ந்தே
வண்ணதமிழ் நாடுகாத்தார் வாழ்த்து!

உச்சமேற் மாப்புலவர்ஓங் குதிருவள்ளுவர்
எச்சத்தார் காணப் படுமென்ற - உச்சத்
தகுதிமிகு தக்கார் தகைசால் கலைஞர்
மிகுதிமேற் சான்றோர் வணங்கு!

வியப்பின் வியப்பாக விஞ்சும் துறைகள்
நயந்துபல் நோக்கின் நலம்தேர் - செயற்கோ
தொட்டதுறை யெல்லாம் துலங்கிப் பொதுவாழ்வின்
எட்டுதிசை போற்று கலைஞர்!

மக்களின் நெஞ்சமெலாம் வாழ்த்தும் கலைஞரே
செக்கர்வான் செஞ்சுடர் தென்திசை - மிக்கபுகழ்ப்
பேரொளியாய்த் தோன்றிப் பிறப்பும் இறந்தாலும்
சீரொளியாய் நிலைத்த சிறப்பு!

இயற்கை மலைகாடு ஏற்றபச்சைத் தோற்றம்
முயற்சிஉரு வாக்குபச்சை முற்றம் - செயற்கையும்
ஓங்கிவளர் ஆற்றல்கோ ஒருலகச் சிந்தனைக்கோ
தாங்கு தமிழ்க் கலைஞர் சான்று!

எழுத்தாளர் தான்இவர்போல் இவ்வுலகு யாரோ?
பழுத்த முதுஅறிவுத்தேறல் - விழுதுவிட்ட
மாவெழுத்தர் மாக்கடல் மாச்சின்னம் காண்கலைஞர்
காவெழுத்தாளர் கலைஞர் கண்!

பல்லாற்றும் தேர்ச்சிய பார்தானே பெற்றதெலாம்
நல்லாற்றின் நாட்டுக்கே நன்றளித் - வெல்லாற்றின்
வெற்றிக் கலைஞர் வினைமாட்சி யார்கண்டார்
சுற்றும் பகைமை தூள் தூள்!

தூள்தூளாய் ஆக்கும் சுயநலமில்லாத
வாள்தகைமை வீரத்தின் வாகைகள் சூழவே
மாற்றாய்த் தமிழ்நாட்டின் மறுமலர்ச்சி மாமுதல்வர்
ஏற்றநம் இஸ்டாலின் இருப்பு!

இருந் தமிழ் நாட்டின் இணையில் முதன்மை
அரும்முதல்வர் ஆளுமை ஆக்கி - பெருந்தமிழ்
நாட்டினில் எல்லார்க்கும் எல்லாம் வழங்குஆட்சி
மாட்சி கலைஞராட்சி மாண்பு!

ஐந்தாண்டு முன்நம் அடலேற்று மாக்கலைஞர்
நைந்துருகச் சென்றாலும் நம்முளம் - பைந்தமிழ்
பேறுருவாய் வாழ்கின்றார் பேச்சினிலும் மூச்சினிலும்
வீறுபெற வெல்வோம் வியந்து!

பெருங்கவிக்கோ
வா.மு.சேதுராமன்

சமூக நீதியை காக்க

லம்பாடி வகுப்பைச் சேர்ந்தவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும்!

மக்களவையில் டாக்டர் செந்தில்குமார் மசோதா தாக்கல்!

புதுடெல்லி, ஆக.12-

மக்களவையில் தர்மபுரி உறுப்பினர் செந்தில்குமார் மசோதா ஒன்றை தாக்கல் செய்தார். அதில் பொருளாதாரம், சுரண்டல், இடர்பாடு, தனிமைப்படுத்தல், சமத்துவமின்மை, பாகுபாடு போன்ற வரலாற்று பிழைகளால் இந்நாட்டில் உள்ள பழங்குடி சமூகங்கள் பல துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இது அவர்களை பின்தங்கிய மற்றும் வரலாற்று பாதிப்புகளுக்கு உள்ளாக்கி உள்ளது. இதனால் அவர்களை அரசியலமைப்பின் பிரிவு 366(25) பட்டியலிடப்பட்ட பழங்குடியினரை 342-வது பிரிவின் கீழ் பழங்குடியினர் அல்லது பழங்குடி சமூகங்கள் என வரையறுக்கப்பட்டுள்ளது. பழங்குடி சமூகங்களுக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் முயற்சியால் சமூக நீதி நடவடிக்கைகளை மேற்கொண்டு பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கான பட்டியலை அரசியலமைப்பு உத்தரவின்படி ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

தமிழகத்தைச் சேர்ந்த "லம்பாடி சமூகத்தை" பழங்குடி பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக நிலுவையில் உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள லம்பாடிகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இதே லம்பாடி வகுப்பைச் சேர்ந்தவர்களை அண்டை மாநிலங்களான கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் அட்டவணைப் பட்டியலில் உள்ளனர்.

தற்பொழுது தமிழ்நாட்டில் இவர்கள் சுமார் 2 லட்சத்திற்கு மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். குறிப்பாக எனது பாராளுமன்றத் தொகுதியான தர்மபுரியில் மட்டும் 50000 லம்பாடிகள் வசிக்கின்றனர். அதில் அரூர் (சிட்டிலிங்கி தாண்டா) பென்னாகரம் மற்றும் தருமபுரி தாலுகாக்களிலும், அதுபோல் சேலம் மாவட்டத்திற்கு உட்பட்ட மேட்டூர் தாலுக்கிலும் (லக்கம்பட்டி). பகுதியில் இவர்கள் அதிகப்படியானோர் வசித்து வருகின்றனர்.

இவர்களை (லம்பாடி வகுப்பைச் சேர்ந்தவர்களை) பட்டியல் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க தமிழக அரசு பரிந்துரை செய்து, 2009 ஆண்டு ஒன்றிய அரசுக்கு அனுப்பியது. இதையே 1994-ல், தேசிய பட்டியல் சாதி மற்றும் பழங்குடியினருக்கான உயர்மட்டக் குழுவும் பரிந்துரை செய்தது, உடனடியாக சமூகநீதியை காக்க உறுதியான நடவடிக்கையை மேற்கொண்டும், மேலும் நேரத்தை இழக்காமல் வழங்குவதற்கு அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்) ஆணையில் திருத்தம் தேவைப்படுகிறது.

எனவே தமிழ்நாடு மாநிலத்தைப் பொறுத்தமட்டில் அட்டவணைப் பழங்குடியினர் பட்டியலில் "லம்பாடி சமூகத்தை" சேர்க்கும் நோக்கத்துடன் இந்த திருத்த மசோதா அழுத்தமாக முழிகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வேலூர் மாவட்ட இலக்கிய அணி சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்!

ஏ.பி.நந்தகுமார் - டி.எம்.கதிர் ஆனந்த் சிறப்புரை!

வேலூர், ஆக. 12-

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் மத்திய ஒன்றியத்தில் உள்ள கழக அலுவலகத்தில். தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் 100 ஆண்டு விழாவை முன்னிட்டு, நாளை (13.8.2023 -ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.30 மணி அளவில்,

கலைஞரை பேசுவோம் வா..! எனும் தலைப்பில்' மாலைநேர கருத்தரங்கம் நடைப்பெறவுள்ளது. இந்த கருத்தரங்கத்திற்கு, கீ.வ. குப்பம் மத்திய ஒன்றிய கழகச் செயலாளரும், ஒன்றியக் குழு தலைவருமான லோ.இரவிச்சந்திரன் தலைமை தாங்குகிறார், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாநில துணைசெயலாளரும், முரசொலி தமிழ்மன்ற நிறுவனருமான சி.கோபி முன்னிலை வகிக்க, முன்னாள் பொதுக்குழு உறுப்பினரும், வேலூர் மாவட்ட இலக்கிய அணியின் அமைப்பாளர் சா.பரிமளம் வரவேற்கிறார். கீ. வ.குப்பம் ஒன்றிய செயலாளர்களான கே.சீதா ராமன், (மேற்கு ஒன்றியம்) எம்.முருகேசன் (கிழக்கு ஒன்றியம்) இவர்களுடன் துரை சிங்காரம் வாழ்த்துரை வழங்க, மாவட்ட இலக்கிய அணி தலைவர் குடியாத்தம் அன்பு, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் பி.கே.கருணாநிதி, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் அமைப்பாளர் கிருபாகரன் ஆகியோர் துவக்க உரை நிகழ்த்த, மாவட்டப் பிரதிநிதிகளான கே.வி.குப்பன், ஜி.இளங்கோவன், மாவட்ட விவசாய அணியின் துணை அமைப்பாளர் பி.கருணாநிதி, ஒன்றிய பொருளாளர் உதயசூரியன்,

கவசம்பட்டு ச.மணிகண்டன் ஆகியோர் ஒருங்கிணைக்க, சா.குமரன், காவனூர் மு.பிரபு ஆகியோர் தொகுப்புரை வழங்க, வேலூர் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.வும், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. சிறப்பு அழைப்பாளராக வருகை புரிந்து சிறப்புறை ஆற்ற உள்ளனர். கலைஞரை பேசுவோம் வா...! எனும் தலைப்பில், தலைமை கழக பேச்சாளர்களான, எஸ்.கதிரேசன், சேர்க்காடு கென்னடி, குடியாத்தம் கவிஞர் த.பாரி, பழ. இராசேந்திர பிரசாத் ஆகியோர் உரைவீச்சு செய்ய உள்ளனர்.மேலும் இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.கே.ஆர். சுந்தரவடிவேல், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், கே.தயாளமூர்த்தி, வி.டி.சிவக்குமார், முன்னாள் ஒன்றிய கழக செயலாளரும், அறங்காவல் குழு தலைவருமான வி.டி. ஜெயக்குமார், நிலவள வங்கி தலைவர் வி.ஜெயராஜ், ஒன்றிய குழு துணைத் தலைவர் பாரதி வெங்கடேசன், மாவட்ட கவுன்சிலர்கள் எம்.அசோக்குமார், கவிதா சுதாசேகர், ஒன்றிய அவைத்தலைவர் இரா. தாமோதரன், மாவட்ட அணிகளின் அழைப்பாளர்களான ஜி.ஆர். கிருட்டிண, ஏ.வி.எம்.மகாலிங்கம், மூர்த்தி கே.கே.செந்தில்குமார், அருணா,கல்பனா, கவிஞர் வேல்முருகன், மயில்வாகனம், டி.மணி, ஒன்றிய கவுன்சிலர் விஜயலட்சுமி முருகன் கழக வழக்கறிஞர்கள் G.விஜயக்குமார் எஸ்.மோகன்ராஜ், மாவட்ட அறங்காவல் உறுப்பினர் சிரி.மகேந்திரன், ஒன்றிய கழகங்களின் பொறுப்பாளர்களானகட்டுக்கல் பாஸ்கர், ஏழ்மை நாதன் நளினி ராம மூர்த்தி, எல்.என். நாராயணன், சி. வேலு, கவுன்சிலர் வேலு, சி.மார்கபந்து, வெங்கடேசன், அசோகன், குட்டி (எ) தியாக ராசன், வி. சிவக்குமார், அன்பழகன்,

கவிதாசிதம்பரம், ஏ.பாரதி, தட்சிணாமூர்த்தி, ஜெயபாரதி, வி.எத்திராசன், பாலசேட்டு, சி.மதியழகன், இளைஞரணி மோகன்,சிரிதர், ஏ.வி.எம். பிரபு, டாக்டர் கோவி.தூயவன், தகவல் தொழில்நுட்ப அணி செல்வகுமார், எம்.முரளி, வினோத்குமார்.

மாணவரணி, செஞ்சி பிரகாஷ், ரஞ்சித்குமார், கே. ஸ்ரீதர், பாலா சதீஷ் வேப்பனேரி இரவி மற்றும் மாவட்ட கழக, ஒன்றிய கழக அணிகளின் பொறுப்பாளர்கள் கிளைகழகங்களின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர், முடிவில் கே.வி. குப்பம் ஜெ.விவேகநந்தன் நன்றி உரையாற்றுகிறார்.

இக்கூட்ட நிகழ்வை முரசொலி தமிழ்மன்றம், மற்றும் மாவட்ட இலக்கிய அணியும் இணைந்து ஏற்பாடு செய்கிறது.

GREATER CHENNAI CORPORATION
SPECIAL PROJECTS DEPARTMENT

S.P.D.C.No.B1/1220/2023

e - TENDER NOTICE

e - Tender is invited for the following work in Two Cover System as per details furnished below.

S.P.D.C.No.B1/1220/2023:- Program Management Consultant for Model & Smart Chennai Schools under CITIIS Fund - Submission of E.M.D. **Rs.3,63,000/-**

Tender document will be available in website	:	https://tntenders.gov.in
Pre-bid meeting date and Time	:	18.08.2023 at 3.00 p.m.
Tender last date and time of submission	:	04.09.2023 upto 3.00 p.m.
Tender opening date and time	:	05.09.2023 at 3.00 p.m

DIPR / 4457 / Tender / 2023

Superintending Engineer / Spl. Projects.

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!